# மேமோகிராம் பரிசோதனையில்

# மார்பக புற்றுநோயை அறிகுறி வருவதற்கு முன்பாகவே கண்டுபிடிக்கலாம்

## கே.எம்.சி.ஹெச்.டாக்டர் ரூபா விளக்கம்



டாக்டர் ரூபா

**கோவை, செப்.4:** கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனையில் ஏராளமான பெண்கள் மேமோகிராம் பரிசோதனை மேற்கொண்டு, மார்பக புற்றுநோயை துவக்கநிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்று முழு குணமடைந்துள்ளனர்.

இது குறித்து கே.எம்.சி.ஹெச்., மருத்துவமனை மார்பக புற்றுநோய் கதிர் வீச்சு சிகிச்சை நிபுணர் டாக்டர் ரூபா கூறியதாவது:

மார்பக புற்றுநோய் நகர்ப்புற பெண்களை அதிகம் பாதிக்கிறது. இந்தியாவில் 2 பெண்களுக்கு ஒருவருக்கு முற்றிய நிலையில் தான் மார்பக புற்றுநோய் கண்டுபிடிக்கப்படுகிறது. மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிவதன் மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணின் உயிரை காப்பாற்ற முடியும்.

பொதுவாக மற்ற புற்றுநோய்களை எந்த அறிகுறியும் இல்லாமல், துவக்க நிலையில் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், அறிகுறி இல்லாமலிருந்தாலும் கூட மார்பக புற்றுநோயை பரிசோதனை மூலம் கண்டுபிடித்து விடலாம். மார்பு புற்றுநோய் கண்டறிய 2 வகை பரிசோதனை உள்ளது. ஒன்று, சுய பரிசோதனை, 2வது மேமோகிராம் பரிசோதனை.

சுயபரிசோதனை என்பது பெண்ணே தனது மார்பகத்தில் மாறுபாடு உள்ளதா என்பதை தடவிப்பார்த்து கண்டுபிடிப்பது. இந்த சுய பரிசோதனையை பெண்கள் 20 வயது முதல் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாத விலக்கு வந்து 14 நாட்கள் மார்பகத்தில் வீக்கம், காம்பில் மாற்றம், திரவம் சுரத்தல், தோலின் நிறம் மாறுதல் உள்ளதா என்பதை கண்டறியவேண்டும். இதில் எதாவதொன்று இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும்.

சுய பரிசோதனையில் கண்டுபிடிக்க முடியாத ஆரம்ப நிலை கட்டிகளை கூட மேமோகிராம் பரிசோதனையில் கண்டுபிடித்து விடலாம். இது ஒரு எக்ஸ்ரே பரிசோதனையாகும். இதன் மூலம் மார்பகத்தில் கட்டி உருவாவதற்கு முன்பான சிறிய மாற்றங்களை கூட முன்கூட்டியே கண்டுபிடித்து விடலாம்.

கண்டுபிடிக்கப்படும் 90 சதவீத கட்டிகள் புற்றுநோய் இல்லாத கட்டிகளாகவே இருக்கும். 10 சதவீத கட்டிகள் மட்டுமே புற்றுநோயாக இருக்கும். இவற்றை முன்கூட்டியே கண்டுபிடிக்கும்போது முழுமையாக குணப்படுத்தி விடலாம். மார்பகத்தை அகற்றாமலே கட்டிகளை மட்டும் அகற்றும் அளவிற்கு நவீன சிகிச்சை முறைகள் வந்து விட்டது.

கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனையில் தேர்ந்த மருத்துவ குழுவினரை கொண்ட மார்பக பரிசோதனை மையம் சர்வதேச தரத்தில் அமைந்துள்ளது. இங்கு மார்பக பரிசோதனை, மேமோகிராம் பரிசோதனை, முழுஉடல் பரிசோதனை, சிகிச்சை அளிப்பது மற்றும் ஆலோசனைகள் அளிப்பது அனைத்தும் ஒரே இடத்தில் வழங்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு, மார்பக புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிபுணர் டாக்டர் ரூபா, கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் : 0422-4324151. இ-மெயில் : *drrupa@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt